www.Padasalai.Net www.TrbTnpsc.com

VNR7T

விருதுநகர் மாவட்டம்

தொகுத்தறித் தேர்வு - 2025

வகுப்பு 7

தமிழ்

கால அளவு: 2.00 மணிநேரம் மதிப்பெண்கள்: 60

பகுதி-1

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 6×1=6

1) 'இடர் ஆழி நீங்குகவே' - இத்தொடரில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் ..........
அ) துன்பம் ஆ) மகிழ்ச்சி இ) ஆர்வம் ஈ) இன்பம்

2) வறுமையைப் பிணி என்றும் செல்வத்தை ........... என்றும் கூறுவர்
அ) மருந்து ஆ) மருத்துவர் இ) மருத்துவமனை ஈ) மாத்திரை

3) மக்கள் அனைவரும் ........... ஒத்த இயல்புடையவர்கள்
அ) பிறப்பால் ஆ) நிறத்தால் இ) குணத்தால் ஈ) பணத்தால்

4) 'நாடென்ப' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..........
அ) நான் + என்ப ஆ) நா + டென்ப இ) நாடு + என்ப ஈ) நாடு + டென்ப

5) கூடு கட்டத் தெரியாத பறவை ..........
அ) காக்கை ஆ) குயில்
இ) சிட்டுக்குருவி ஈ) தூக்கணாங்குருவி

6) விடுத்தலைப் போராட்டத்தின் போது காயிதே மில்லத் ........... இயக்கதில் கலந்து கொண்டார்
அ) வெள்ளையனே வெளியேறு ஆ) உப்புக் காய்ச்சும்
இ) சுதேசி ஈ) ஒத்துழையாமை

**ஆ) பொருத்துக** 4×1=4

7) நீர் - அமைதி
8) ஆர்வம் - தாமிரபரணி
9) சாந்தம் - பாய்ச்சுதல்
10) தண்பொருநை - நெய்

பகுதி-2

**இ) ஓரிரு சொற்களில் விடையளிக்க. (ஏதேனும் ஐந்து வினாக்கள் மட்டும்)** 5×2=10

11) பாரி மகளிரின் பெயர்களை எழுதுக
12) உழவர்கள் எப்போது நண்டு பிடித்தனர்?
13) உவமை, உவமேயம், உவமஉருபு விளக்குக
14) பொய்கையாழ்வார் எதற்காகப் பாமாலை சூட்டுகிறார்?
15) பொருளீட்டுவதை விடவும் பெரிய செயல் எது?
16) ஒரு நாடடுக்கு எவையெல்லாம் அரண்களாக அமையும்?
17) உலகம் நிலைதடுமாறக் காரணம் என்ன?

**ஈ) ஓரிரு தொடர்களில் விடையளிக்க. (ஏதேனும் மூன்று வினாக்கள் மட்டும்)** 3×4=12

18) உழவுத் தொழிலின் நிகழ்வுகளை வரிசைப்படுத்தி எழுதுக
19) திருநெல்வேலிக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பு குறித்து எழுதுக
20) ஒப்புரவுக்கும் உதவிசெய்தலுக்குமுள்ள வேறுபாடு யாது?
21) நீங்கள் ஒரு தலைவராக இருந்தால் எத்தகைய மக்கள் நலப்பணிகளைச் செய்வீர்கள்?
22) இரட்டைக்கிளவி, அடுக்குத்தொடர் - ஒப்பிடுக

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

### பகுதி-3

உ) எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க. 5×2=10

23) **கலைச்சொல் எழுதுக**

அ) Ambition ஆ) Philosophy

24) **தொடருக்குப் பொருத்தமான உவமையை எடுத்து எழுதுக**

அ) என் தயார் என்னை ............. காத்து வளர்த்தார்

(கண்ணை இமை காப்பது போல / தாயைக் கண்ட சேயைப்போல)

ஆ) சிறு வயதில் நான் பார்த்த நிகழ்ச்சிகள் ............. என் மனத்தில் பதிந்தன

(கிணற்றுத்தவளை போல/பசுமரத்தாணி போல)

25) **கொடுக்கப்பட்டுள்ள ஊரின் பெயர்களில் இருந்து புதிய சொற்களை உருவாக்குக**

அ) உதகமண்டலம் ஆ) கன்னியாகுமரி

26) **சரியான வினாச்சொல்லை இட்டு நிரப்புக**

அ) .......... சொற்களைப் பேச வேண்டும்?

ஆ) அறநெறிச்சாரம் என்பதன் பொருள் .............?

27) **தலைப்புச் செய்திகளை முழு சொற்றொடர்களாக எழுதுக**

அ) மாவட்ட அளவிலான அறிவியல் கண்காட்சி - ஏழாம் வகுப்பு மாணவி முதலிடம்

ஆ) மாநில அளவிலான பேச்சுப்போட்டி - சென்னையில் இன்று தொடக்கம்

28) **கீழ்க்காணும் தலைப்பில் கவிதை எழுதுக**

அ) அன்பு

29) **சரியான இணைப்புச் சொல்லால் நிரப்புக**

(மேலும், இல்லையென்றால், ஏனெனில்)

அ) காயிதே மில்லத் அவர்கள் மகிழுந்தில் பயணம் செய்வதை விரும்பாதவர் ......... அவர் எளிமையை விரும்பியவர்

ஆ) தமிழகத்தில் மழை பெய்து வருகிறது .......... இரண்டு நாள் மழை நீடிக்கும் என வானிலை ஆய்வு மையம் அறிவிப்பு

### பகுதி-4

ஊ) அடிபிறழாமல் எழுதுக 4+2=6

30) ‘இன்சொல்’ எனத் தொடங்கும் அறம் என்னும் கதிர் பாடலை அடிபிறழாமல் எழுதுக

31) ‘வினையால்’ - எனத் தொடங்கும் குறளை எழுதுக

### பகுதி-5

எ) ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளி. 1×6=6

32) ‘உண்மை ஒளி’ படக்கதையைக் கதையாகச் சுருக்கி எழுதுக

33) ‘பயணம்’ கதையைச் சுருக்கி எழுதுக

### பகுதி-6

ஏ) ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளிக்க. 1×6=6

34) கட்டுரை எழுதுக - என்னைக் கவர்ந்த நூல்

35) உங்கள் ஊரில் நடைபெறும் திருவிழாவைக் காண வருமாறு அழைப்பு விடுத்து உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக

\- - - - - - -

www.Padasalai.Net

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com